# கல்விவளங்கள் செயற்றிட்டம் ஆண்டறிக்கை
# 2024

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | கல்விவளங்கள் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0009 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2020 மாசி |
| அறிக்கையிடல் காலம் | தை 2024 - மார்கழி 2024 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | Face |
| முக்கிய பங்குத்தாரர்கள் | அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| அறிக்கையிடல் காலத்திற்குரிய செயற்றிட்டச் செலவு | 604,536 ரூபா |

செயற்றிட்ட அறிமுகம்

2020 திறந்த கல்வி வளங்கள் செயற்திட்டமானது, இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் கல்வி சார் முயற்சிகளுக்கு உறுதுணையாக அமையும் வண்ணம் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்றிட்டமாகும். பாடசாலைகளிலே மேற்கொள்ளப்படும் கற்றல் கற்பித்தற் செயன்முறைகளுடன் தொடர்பான ஆவணங்களைச் சேகரித்து, ஆவணப்படுத்தி அவற்றை இணையத் தளம் வழியாக பாடசாலை சமூகம் மற்றும் அனைவருக்கும் பயன்தரும் வகையில் வெளியிடுதலே இச்செயற்றிட்டப்பணியாக அமைகிறது.

இலக்கு

பாடசாலைகள் மற்றும் கற்றல் நிலையங்களுடன் வலையமைப்பினை உருவாக்கி கல்வியுடன் தொடர்புடைய அனைத்து வளங்களையும் திரட்டி கற்றல் சமூகத்திற்குரிய வகையில் நூலக விஞ்ஞான வகைப்படுத்தல்களுக்கமைய திறந்த அணுக்கத்தில் வழங்குதல்.

நோக்கம்

- பாடசாலைக் கல்வியுடன் தொடர்பான வளங்கள் கிடைக்கப்பெறும் தளங்களை அறிந்து அங்கு காணப்படும் ஆவணங்களை, அனுமதி பெற்று, நூலகச் சீர்தரங்களுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி விபரித்து ஒரு தளத்துக்குக்

கொண்டு வந்து, வகுப்பு ரீதியாகவும், பாட ரீதியாகவும் பகுத்து மாணவர்களின் பாவனைக்காக விடுதல்

- பாடசாலை மற்றும் கல்வி நிலையங்களுக்கிடையிலான வலையமைப்பினை கட்டியெழுப்புதல்.
- செயற்றிட்டம் தொடர்பான விழிப்புணர்வை கற்றல் சமூகத்தினரிடையே ஏற்படுத்தல்.

அடைவுகள்

- 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை இச்செயற்றிட்டத்தின் கீழ் 18,007 கல்வி சார் ஆவணங்கள் மின்வருடப்பட்டும் மென்கோப்பு வடிவிலும் இச்செயற்றிட்ட முகப்பில் அனைவருக்குமான இலவச அணுக்கத்தில் கிடைக்கும் வகையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**2024** ஆம் ஆண்டிற்கான அடைவுகள்

- 2024 ஆம் ஆண்டு இச்செயற்றிட்டத்தின் கீழ் 3,736 ஆவணங்கள் இச்செயற்றிட்ட முகப்பின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.
- 03 ஒக்டோபர் 2024 அன்று திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற விவசாயக் கண்காட்சி **2024** ல் விழிப்புணர்வு செயற்பாடு இடம்பெற்றது.

  திறந்த கல்வி வளங்கள் செயற்றிட்டத்துடனான கூட்டு கல்வி நிறுவனங்கள்

- மாகாணக் கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்
- தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்
- நெல்லியடி மத்திய கல்லூரி
- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
- யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
- யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்
- கற்சுமி கல்வி நிறுவனம்
- யா/ பிளவத்தை அ. மி. த. க. பாடசாலை
- வலயக் கல்வி அலுவல்கம் - தென்மராட்சி
- சாவகச்சேரி இந்துக் கல்லூரி
- யாழ்ப்பாணக் கல்லூரி

எதிர்கொண்ட சவால்கள்

- Noolaham.school வலைத்தளத்தில் இணைக்கப்படும் ஆவணங்களை நேரடியாக பார்வையிடமுடியாத நிலை காணப்பட்டது.
- பாடசாலைகளில் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களில் அனுமதி பெறுவதில் சிக்கல்கள் மற்றும் கால தாமதம் காணப்பட்டமை.
- பாடசாலைகளில் வினாத்தாள்களை சரியான ஒழுங்குமுறையில் பேணப்படாமையினால் வினாத்தள்களினை பெறுவதில் சிக்கல் காணப்படுதல்.

- யாழ்ப்பாணம் மாவட்டம் தவிர்ந்த ஏனைய பிராந்தியங்களில் அனுமதி மற்றும் வினாத்தாள்களை பெற்றுக் கொள்வதில் சிக்கல் காணப்படுகின்றமை

கற்றல்களும் பரிந்துரைகளும்

- Noolaham.school வலைத்தளத்தில் இணைக்கப்படும் ஆவணங்களை நேரடியாக பார்வையிடமுடியாத நிலையினை சரி செய்யும் வகையிலான பணியாளர் ஒருவரை நியமித்தல்.
- நூலகம் மற்றும் பாடசாலைகள் , வலயக் கல்வி அலுவலகங்களுக்கிடையில் சந்திப்புகளை உருவாக்குவதல்.
- பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இடமாற்றம் செய்யப்படும் செயற்றிட்டத்திற்குரிய பணியாளர்கள் அடுத்ததாக வரும் பணியாளர்களிடம் செயற்றிட்டம் பற்றிய அறிமுகத்தினை வழங்கிச்செல்லல்.
- தன்னார்வலர்கள் மூலம்  ஏனைய பிராந்தியங்களில் காணப்படும் விடயங்களையும் உள்ளெடுத்தல்.

முடிவுரை

கல்விவள செயற்றிட்டமானது 2020 ஆம் ஆண்டு தொடக்கம் நூலக நிறுவத்தினால் FACE நிறுவத்தின் நிதி உதவியுடன் செயற்பட்டு வருகிறது. இச் செயற்றிட்டத்தின் ஊடாக இதுவரை 21,743 ஆவணங்கள் செயற்றிட்ட முகப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

பின்னிணைப்பு
திறந்த கல்வி வளங்கள்